மக்களுக்கு ஓரளவுக்கு அவசரக் காலத்தில் நிவாரணம் கிடைக்கும். ஆகவே அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி பேரவைத் தலைவரவர்களே, அங்கே இருக்கிற அரசு மருத்துவ மனையில் இப்போது 12 படுக்கை வசதிகள் இருக்கின்றன. அங்கே 2 பெண் மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே உள் நோயாளிகளின் எண்ணிக்கை சராசரி 9 என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே அங்கே போதுமான அளவுக்குப் படுக்கை வசதிகள் இருப்பதால், இப்போது படுக்கைகளை அதிகரிக்கும் திட்டமில்லை.

சென்னை செவிலியர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு

*5213. **திரு. இரா. சாமிநாதன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை செவிலியர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு M.Sc. (Nursing) தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அரசு பொது மருத்துவ மனைக்கு இந்தியாவிலேயே மாடர்ன் ஆஸ்பிடல் என்ற வரலாறு உண்டு. அப்படிப்பட்ட ஒரு மருத்துவ மனையில் நர்சிங் பட்டப் படிப்பு தொடங்கி 10 ஆண்டுகள் ஆகியும், இன்னும் எம்.எஸ். சி. (நர்சிங்) பட்ட மேற்படிப்பு தொடங்காமல் இருப்பதால், அதைக் கழக அரசு தொடங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய நர்சிங் கவுன்சில் வரையறுத்துள்ளபடி எம்.எஸ்.சி. (நர்சிங்) பட்ட மேற்படிப்பு துவங்க குறைந்தபட்சம் 10 நபர்களாவது

1990 மே 5]

அந்த மருத்துவமனையில் இருக்க வேண்டும். அப்படி 10 நபர்கள் இங்கே இல்லை. 10 நபர்கள் வரும்போது அதை ஆரம்பிக்க முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். அடுத்த ஆண்டு இதை உருவாக்க ஒரு கருத்துரு அரசிடம் இருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்விக்காக தனியாக மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே எம். எஸ். சி. (நர்சிங்), டிப்ளமோ (தியேட்டர் நர்சிங்) போன்ற சிறப்பு மருத்துவக் கல்வி, செவிலியர்கள் பெற விரைவாக எம்.எஸ்.சி. (நர்சிங்) மேல் பட்டப் படிப்பைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முந்தைய கேள்வி யிலேயே இதற்கும் பதில் சொல்லிவிட்டேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியில் இருக்கிற பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் பி.எஸ்.சி. (நர்சிங்) என்ற பட்டப் படிப்பு இருக்கிறது. அதில் மாணவிகள் அதிகமாகப் படிக்கிறார்கள். அவர்களுக்கு மேல் படிப்பு தரும் வகையில் எம்.எஸ்.சி. (நர்சிங்) மேற்பட்டப் படிப்பை உடனடியாகத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எஸ்.சி. நர்சிங் கூட இப்போது அரசினால் அங்கீகரிக்கப்படாமல், சில தனியார் நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. அவைகளுக்குக்கூட அரசு அங்கீகாரம் கொடுக்கவில்லை. ஆகவே அரசு நடத்துகிற பி.எஸ்சி.(நர்சிங்)போன்றவைகள் முழுமை பெற்ற பிறகு 10பேர் எம்.எஸ்சி. (நர்சிங்) படித்தவர்கள் வந்த பிறகு இங்கே பொது மருத்துவமனையில் எம்.எஸ் சி. (நர்சிங்) ஆரம்பிப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் களைப் பயிற்சி பெறச் செய்கிறபோது சம்பந்தப்பட்ட அரசு பொது மருத்துவமனையின் லே செக்ரடரி—அதாவது ஒரு ஆணாக இருக்கிறவர், பெண் செவிலியர்களின் அங்க மச்ச அடையாளங்களைப் பார்க்கிற முறை நடைமுறையில் இருக்கிறது. அவர்.............(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் குற்றச் சாட்டுகள் கூடாது.

செயற்கை மழை.

*5647. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயத்தில் செயற்கை மழை பொழியவைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி மிக வறட்சியான பகுதி; மானாவாரிப் பகுதி, கோவை, பெரியார் மாவட்டங்களில் பெரும் பகுதி எப்போதுமே மழை இல்லாது வறட்சிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே செயற்கை மழையை அந்தப் பகுதியிலே பொழிய வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்னால் எக்ஸ்பெரிமெண்டலாக சில இடங்களில் செய்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செய்ய வேண்டும். நிலத்தடி நீர் வறண்டுவிட்டது. குடிப்பதற்கே தண்ணீர் இல் லாத சூழ்நிலை இருக்கிறது; விவசாயமும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சுற்றி இருக்கிற தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்களை கேட்பீர்களே யானால் உங்களுக்குப் புரியும். ஆகவே இதற்கு அரசு அதிகமான நிதி ஒதுக்கி, எதிர்காலத்திலே—அதாவது விஞ்ஞானத்தில் நாடு முன்னேறி இருக்கிறது—இதற்கு இந்த அரசு ஏன் முயற்சி செய்யக்கூடாது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி இயற்கையாக இருக்கட்டும்; கேள்வி செயற்கையாக இருக்கிறது.

திரு. பி. மாரப்பன் : அரசு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.